# தமிழ் - இடைநிலைக் கல்வி (237)

## (அக மதிப்பீடு) Tutor Marked Assignment (2025-26)

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) காளையார் கோயிலின் இருப்பிடத்தை எழுதுக. (பாடம் 12)

   (ஆ) சுயஉதவிக்குழுவின் தணிக்கை என்பதைக் கூறுக. (பாடம் 32)

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) பணம் வேண்டி தந்தைக்கு மகன் எழுதுவதுபோலக் கடிதம் எழுதுக. (பாடம் 14)

   (ஆ) தெரு விளக்கு வசதி கேட்டு குறைதீர் விண்ணப்பம் ஒன்று எழுதுக. (பாடம் 31)

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) பழத்தோட்ட அருவி மற்றும் பழைய குற்றால அருவி குறித்து எழுதுக. (பாடம் 16)

   (ஆ) கோக்கர்ஸ் நடைபாதை குறித்து எழுதுக. (பாடம் 15)

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

   (அ) காந்தியின் வரலாறும் தென்ஆப்பிரிக்க வாழ்க்கையும் குறித்து எழுதுக. (பாடம் 17)

   (ஆ) கீழே உள்ள பகுதியினைச் சுருக்கி வரைக. (பாடம் 18)

**ஆட்டக்கலை**

சடங்கு சார்ந்த இக்கரகாட்டம் நாளடைவில் ஒரு ஆட்டக்கலையாக உருமாறியது. காலில் சலங்கை அணிந்து ஆடும் கரகாட்டக்கலைஞர்கள் இந்நடனத்தில் புதுப்புது உத்திமுறைகளைப் பயன்படுத்தி ஆடிவருகின்றனர்.

**Unnati Educations**
**9899436384, 9654279279**

முதலில் ஆண்கள் மிகுதியாக ஆடிய இக்கரகாட்டத்தில் தற்பொழுது பெண்களும் மிகுதியாகப் பங்கேற்று ஆடிவருகிறார்கள். முதலில் அடவுகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்த இக்கலைஞர்கள் தற்பொழுது இதன் மூலம் சாகச வேலைகளைச் செய்கின்றனர்.

தலையில் கரகத்தை வைத்துக்கொண்டு நீண்ட கத்தியால் எதிரில் உள்ளவர் மார்பில் வைக்கப்பட்ட வாழைக்காயை வெட்டுதல், தேங்காய் உடைத்தல், கண் இமைகளை மூடிக்கொண்டு ஊசியில் நூல்கோர்த்தல், ஏணியில் ஏறுதல் முதலிய செயல்களைச் செய்து காட்டுகின்றனர்.

இக்கரகாட்டம் ஆட்டக்கலையாக மாறிய போதும் ஆடும் கலைஞர்கள் கரகத்தைத் தலையில் ஏற்றுவதற்கு முன்பு மாரியம்மனை வணங்கியே தலையில் கரகத்தை வைக்கின்றனர்.

**நடைபெறும் இடம்**

மதுரைப் பகுதிகளில் கரகாட்டம் இன்னும் பழமை மாறாமல் ஆடப்பட்டு வருகிறது. தஞ்சை, சென்னை, சேலம் போன்ற பகுதிகளில் இக்கரகாட்டம் மிகவும் அழகுபடுத்தப்பட்டு, புதுமைகள் புகுத்தப்பட்ட கலையாக மாறியுள்ளது.

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
(அ) குறிஞ்சித்திணை குறித்து எழுதுக. (பாடம் 18)
(ஆ) இந்தியப் பண அஞ்சல் படிவத்தை நிறைவு செய்யும் முறைகளை விவரி. (பாடம் 30)

6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6
(அ) இரண்டாம் சரபோசி செய்த சாதனைகள் யாவை? (பாடம் 33)
(ஆ) பின்வரும் உழைப்பு தந்த உயர்வு என்னும் தலைப்பிலமைந்த கதையை நாடகமாக மாற்றுக. (பாடம் 35)

உழைப்பு தந்த உயர்வு

கண்ணனூர் என்னும் ஊரில் கந்தன், சுந்தரம் என்ற இளைஞர்கள் வாழ்ந்தனர். அவர்கள் இருவரும் பட்டப்படிப்பை முடித்தும் வேலை ஏதுமின்றியிருந்தனர். கந்தன் வேலைக்காக விண்ணப்பித்தும், மேற்கொண்டு எந்த முயற்சியும் செய்யாமல் இருந்தான். அவனது தந்தை வேலை கிடைக்கவில்லையென்றாலும் பரவாயில்லை, வேறு ஏதாவது தொழில் தொடங்கு என்று கந்தனிடம் கூறியும் அவன் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. ஆனால், அவனுடன் படித்த சுந்தரமோ, வேலைக்கு விண்ணப்பித்தும் கிடைக்கவில்லையே எனச் சோம்பேறியாக இல்லாமல் ஒரு மளிகைக்கடையைச் சிறிய அளவில் ஆரமபித்தான். நேர்மையாகக் கலப்படமின்றிப் பொருட்களை விற்றதால், நாளடைவில்

Unnati Educations
9899436384, 9654279279

வியாபாரம் பெருகியது. பெரும் செல்வந்தனாக மாறினான். ஒரு நாள் சுந்தரம் கந்தனிடம், சுந்தரம் வேலைவாய்ப்பு மட்டுமே மனிதனைக் காப்பாற்றுவதில்லை சுயமாகத் தொழில் தொடங்கி வாழ்வில் முன்னேறலாம் என அறிவுரை கூறினான். அவனது அறிவுரையைக்கேட்ட கந்தனும் மனம் மாறி தொழில் தொடங்கி மகிழ்வுடன் சென்றான்.

----------------

**Unnati Educations**
**9899436384, 9654279279**